

ALPHA MIND POWER™

"Power of the Subconscious Mind"

Newsletter

**NOVEMBER 2015**

My dear Alpha Siddha,

Writing you with my love and blessings.

I am very happy to say that our 'Collective Meditations' are gathering strength day by day. More and more Alpha Siddhas are joining every day and tremendous energy is being felt by all of them. Apart from the energy felt during the meditation, goal manifestation also is becoming easier.

Let me explain what 'Collective Meditation' is for the sake of those who are not aware of it. We have fixed three timings for collective meditation by Alpha Siddhas. These are 5.30 am, 11.00 am and 10.00 pm. Indian time everyday. Alpha Siddhas from various cities or countries join together and meditate at their own places at these timings. You can join the meditation during all the 3 timings or whichever is possible for you. Ofcourse, you can meditate at any time on your own. But joining the collective meditation is a different experience.

At this time, you can sit down to meditate. Do your breathing exercise or pranayamam. Mentally connect with Guru, God and Holy Siddhas. You will feel tremendous energy flowing to you as thousands of Alpha Siddhas will be meditating at the same time. Then switch on any one of our Alpha meditations of your choice. You can choose according to whichever level you are practicing. At the end of the meditation, add the command **"Every Human mind generates only positive thoughts".**

Then visualize your goals one by one. You can also use the energy balls to energise your goals. You can continue with the other steps as per your routine. Give colors to yourself and your family members. Activate the psychic shield etc. Any healing required can also be done at this point.

From the feedback that we have been receiving about Collective Meditation, we are able to gather some points. The energy experienced during the collective meditation is very high and hence it is very easy to get into Alpha state. Goals visualized at this energy level are manifesting very easily. Healing done with this energy is also happening quickly.

Now, we have formed many whatsapp groups for Alpha Siddhas. We are sending reminders on whatsap to join the collective meditation. This is prompting many Alpha Siddhas to join the meditations at the specified timings without fail. Many have started meditating after a long gap. They are seeing the positive changes within themselves too.

So, in every way, our collective meditations are becoming very powerful and meaningful. Together we can create more awareness and motivation to meditate. We can also reap the benefits.

Just the feeling that thousands of Alpha Siddhas are sitting right at that moment and meditating is sufficient to take us to a very deep state of Alpha. Make sure you experience this energy and manifest all your goals.

Half an hour meditation is what we specify for the collective meditation. But you can make it longer or shorter depending on your convenience.

Personally, I am very happy about this. I am also joining the meditations and I can feel the connection with all the Alpha Siddhas. And such a powerful positive energy! It is really remarkable.

My blessings to you to meditate regularly and grow spiritually,

Srimatha

என் அன்பிற்குரிய ஆல்ஃபா சித்தரே,

அன்பும் ஆசீர்வாதமும் கலந்து எழுதுகிறேன்.

நமது கூட்டு தியானம் நாளுக்கு நாள் சக்தி பெற்று வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் புதிதாக ஆல்ஃபா சித்தர்கள் சேர்ந்து வருகிறார்கள். மிக அதிகமான சக்தியையும் உணர்ந்து வருகிறார்கள். அதிக சக்தியை உணர்வது மட்டுமல்லாது இலட்சியங்களும் விரைவாக நிறைவேறுவதை உணர்ந்து வருகிறார்கள்.

கூட்டு தியானம் என்றால் என்ன என்பதை பற்றி ஒரு சிறு விளக்கம்.நமது ஆல்ஃபா சித்தர்கள் சேர்ந்து கூட்டு தியானம் செய்ய மூன்று நேரங்களை நியமித்து இருக்கிறோம். அவை காலை 5.30 மற்றும் 11 மணி, மேலும் இரவு 10 மணி. பல நகரங்கள் மற்றும் தேசங்களிலும் இருக்கும் ஆல்ஃபா சித்தர்கள் அவரவர்கள் இடத்திலிருந்தே இந்த கூட்டு தியானத்தில் கலந்து கொள்ளலாம். இந்த மூன்று நேரங்களிலும் நீங்கள் கலந்து கொள்ளலாம். அல்லது உங்களால் முடிந்த பொழுது கலந்து கொள்ளலாம். நீங்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தியானம் செய்யலாம். ஆனால் கூட்டு தியானத்தில் கலந்து கொள்ளும் பொழுது கிடைக்கும் அனுபவம் மிகவும் வித்தியாசமானதாகும்.

இந்த நேரத்தில் தியானம் செய்ய அமர்ந்து கொள்ளுங்கள். பிராணாயாமம் அல்லது மூச்சு பயிற்சியை முடித்துக் கொள்ளுங்கள். பின்னர் குரு, கடவுள் மற்றும் சித்தர்களுடன் மனதால் தொடர்பு கொள்ளுங்கள்.அதே சமயத்தில் ஆயிரக்கணக்கான ஆல்ஃபா சித்தர்கள் தியானம் செய்வதால் மிகப் பெரிய சக்தியை உணர்வீர்கள். ஏதேனும் ஒரு ஆல்ஃபா தியானம் CDயை போடுங்கள். நீங்கள் எந்த கட்டம் முடித்திருக்கிறீர்களோ அதற்குரிய தியானம் செய்யுங்கள். தியானம் முடிக்கும் பொழுது ‘ஒவ்வொரு மனித மனமும் நல்ல எண்ணங்களை மட்டுமே உருவாக்குகிறது என்ற கட்டளையை கொடுங்கள்’.

பின்னர் உங்கள் இலட்சியங்களை ஒவ்வொன்றாக காணுங்கள். சக்தி பந்தையும் பயன் படுத்துங்கள். எப்பொழுதும் போல் தியானத்தை தொடருங்கள். உங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் நிறங்கள் செலுத்துங்கள். சக்தி கவசத்திற்கு சக்தி அளியுங்கள். இச்சமயம் ஏதேனும் நோய் தீர்க்கும் தியானம் தேவைப்பட்டாலும் தொடர்ந்து செய்யுங்கள்.

கூட்டு தியானம் பற்றி கிடைக்கும் அனுபவங்களிலிருந்து சில விஷயங்களை புரிந்து கொள்ள முடிந்தது. கூட்டு தியானத்தின் பொழுது கிடைக்கும் மிகப் பெரிய சக்தியினால் வெகு சுலபமாக ஆல்ஃபா நிலைக்கு போக முடிகிறது. இந்த நிலையில் காணும் இலட்சியங்கள் மிக விரைவாக நிறைவேறுகின்றன. நோய் தீர்க்கும் தியானத்திலும் சிறந்த பலன் கிடைக்கிறது.

ஆல்ஃபா சித்திர்களுக்காக பல வாட்ஸ்அப் குரூப் உருவாக்கி இருக்கிறோம்.கூட்டு தியானத்தில் கலந்து கொள்ள இதன் மூலம் ஆல்ஃபா சித்தர்களுக்கு நினைவூட்டுகிறோம். இது பல ஆல்ஃபா சித்தர்களை குறிப்பிட்ட நேரத்தில் கூட்டு தியானத்தில் கலந்து கொள்ள ஊக்குவிக்கிறது. பல நாட்களுக்குப் பிறகு மீண்டும் தியானத்தை துவங்கிய பலர் தங்களுக்குள் சிறப்பான மாற்றத்தை காண்கிறார்கள்.

ஆக, நமது கூட்டு தியானங்கள் எல்லா விதத்திலும் சக்தி பெற்று வருகின்றன. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து தியானம் செய்வதற்கு மனதை பக்குவப் படுத்தி ஊக்குவிப்போம். அதன் பலன்களையும் கண்முன் காண்போம்.

ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான ஆல்ஃபா சித்தர்கள் தியானம் செய்கிறார்கள் என்ற ஒரு எண்ணம் போதும் நம்மை ஆழ்ந்த ஆல்ஃபா நிலைக்கு கொண்டு சென்று விடும். இந்த அற்புத சக்தியை அவசியம் உணருங்கள். உங்கள் இலட்சியங்கள் அனைத்தும் நிறைவேறுவதையும் காணுங்கள்.

இந்த கூட்டு தியானத்திற்கு அரை மணி நேரம் என்பது நாம் குறிக்கும் நேரம். ஆனால் உங்கள் சௌகரியம் போல் சற்று குறைவாகவோ அதிகமாகவோ நீங்கள் தியானம் செய்யலாம்.

உள்ளபடியே இந்த விஷயம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நானும் இந்த நேரங்களில் தியானத்தில் கலந்து கொள்கிறேன். ஆல்ஃபா சித்தர்களுடன் ஒரு தொடர்பை அந்த நேரத்தில் மிக நன்றாக உணர முடிகிறது. எப்படிப் பட்ட சக்தி!ஆச்சரியமூட்டும் சக்தி!

நீங்கள் தொடர்ந்து தியானம் செய்யவும் ஆன்மிகத்தில் வளரவும் எனது ஆசிகள்,

ஸ்ரீமாதா

## FEEDBACK – அனுபவங்கள்

During Shantagni program I personally felt that something that blocked me went out. I got a beautiful Spiritual vision Feeling blissful and blessed by all the Munies, Rishies, Siddhas and by our Guruji ***- P. Sudha***

Shantagni program helped us to realize ourselves and how to be in future. We got what others could not get in this world. ***Indumathi***

After Shantagni my thoughts are more clear. My senses became even more sharper than ever before. I felt the vibration and energy of Mahaavathar Babaji and Ganga Matha.

***– Saranya Joghee***

Words can't explain the power of Alpha! Its just amazing and it works with anything and everything... I have been joining the collective meditation for some time. Today I was working in my laptop with something important and suddenly it got damaged ...I waited for half an hour tried everything...then I did Alpha for five minutes, I couldn't believe it. My laptop restarted on its own. I still can't believe that it happened in just five minutes Alpha is simply great. ***-Lakshmi Krishnakumar***

I have completed level 2. I have felt the immense energy in collective meditation in these 2 months of my life. I have cleared 4 papers of CA final and going to write the rest 4 in Dec 15. I was able to achieve my biggest longing and ambition of my life just because of alpha meditation. Thanks a lot guruji for giving such a golden opportunity.

***-Mridula Chennai***

My sister's son who is 12 years old, was suffering from stomach pain, we found it was due to appendicitis. Doctors said we have to operate. We started the healing meditation for him continuously. Then, after keeping him under observation for one week, they discharged him without a surgery. This is an Alpha miracle only! Thanks Guruji ! Thanks to Alpha! Thanks to all Holy Siddhas! Thanks to Bala Tripura Sundari! Thanks to Mahavathar Babaji.

***-Dinesh. C. Bangalore***

சாந்தக்னி வகுப்பில் உண்மையாகவே எனக்குள்ளிருந்து ஏதோ வேண்டாத ஒன்று வெளியேறியதை என்னால் உணர முடிந்தது. மிக சிறந்த அனுபவம் அங்கு கிடைத்தது. அத்தனை முனிவர்களும், ரிஷிகளும், சித்தர்களும் அவர்களுடன் குருஜியும் சேர்ந்து வாழ்த்தியதை என்னால் உணர முடிந்தது. **– சுதா**

சாந்தக்னி வகுப்பு நான் யார் என்பதை புரிந்து கொள்ள வைத்தது. எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் உணர வைத்தது. உலகில் மற்றவர்களுக்கு கிடைக்காத பொக்கிஷமாக இந்த அனுபவம் அமைந்தது. **– இந்துமதி**

சாந்தக்னிக்குப் பிறகு எனது எண்ணங்களில் நல்ல தெளிவை உணர முடிகிறது. எனது புலன்கள் இன்னும் சிறப்பாக இயங்குவதையும் உணர முடிகிறது. மஹாவதார் பாபாஜி மற்றும் கங்கா மாதாவின் சக்தியை நிதர்சனமாக உணர முடிந்தது.

**– சரண்யா ஜோகி**

ஆல்ஃபாவின் மகிமையை சொல்ல வார்த்தைகளே இல்லை. ஆச்சரியமாக இருக்கிறது. எல்லாவற்றுக்குமே பயன்படுகிறது. நான் கூட்டு தியானத்தில் சில நாட்களாக கலந்துகொள்கிறேன். இன்று எனது லேப்டாப்பில் முக்கியமான வேலையாக இருந்தபொழுது திடீரென்று அது நின்றுவிட்டது. அரை மணி நேரம் என்னால் முடிந்த அளவுக்கு ஏதேதோ செய்து பார்த்தேன். பிறகு 5 நிமிடம் ஆல்ஃபா செய்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. லேப்டாப் தானாகவே இயங்கத் துவங்கிவிட்டது. ஆல்ஃபா உண்மையாகவே ஒரு ஆச்சரியம் தான். **–லக்ஷ்மி கிருஷ்ணகுமார்**

நான் கட்டம் 2 முடித்துள்ளேன். கடந்த 2 மாதங்களாக கூட்டு தியானத்தில் கலந்து கொண்டு மிகுந்த சக்தியை உணர்ந்து வருகிறேன். CA படிப்பில் 4 பேப்பர் முடித்துவிட்டேன். மீதம் 4 டிசம்பர் மாதம் எழுதவிருக்கிறேன். என் வாழ்க்கையின் மிகப் பெரிய இலட்சியத்தை ஆல்ஃபா மூலமே அடைய முடிந்தது. இப்படி ஒரு அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த குருஜிக்கு மிக்க நன்றி! **– மிருதுலா, சென்னை**

12 வயது நிரம்பிய என் சகோதரியின் பையன் வயிற்றுவலியால் துடித்துவந்தான். மருத்துவர்கள் ஸ்கேன் எடுத்து பார்த்துவிட்டு அவனுக்கு அபென்டிக்ஸ் வளர்ந்திருப்பதாகவும், ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும் சொல்லி விட்டார்கள். நான், சகோதரி, என்னுடைய அம்மா மூன்று பேரும் தொடர்ந்து அவனுக்காக நோய் தீர்க்கும் தியானம் செய்துவந்தோம். ஒரு வாரம் கழித்து அறுவை சிகிச்சை இல்லாமலேயே அவன் குணமடைந்து விட்டதால் டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். இது ஆல்ஃபாவினால் தான் நடந்தது என்பதில் எனக்கு சற்றும் அய்யமில்லை. ஆல்ஃபாவிற்கும், பாலா த்ரிபுரசுந்தரிக்கும், மஹாஅவதார் பாபாஜிக்கும் நன்றி!

**–தினேஷ், பெங்களூரு**

## சாந்தக்னி – பிப்ரவரி 2016

மகாவதார் பாபாஜியின் ஆசிகளுடன் நமது முதல் சாந்தக்னி வகுப்பு மிகவும் வெற்றிகரமாக ரிஷிகேஷில் நடந்து முடிந்தது இப்பொழுது அடுத்த **சாந்தக்னி** நிகழ்ச்சி பற்றி அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்:

தேதிகள்: 03.02.2016 செவ்வாய் முதல்
07.02.2016 ஞாயிறு வரை

இடம் : ஸ்ரீ ஸ்வாமி சித்பவானந்தா ஆசிரமம், வேதபுரி,
தேனி, தமிழ்நாடு

குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே இடங்கள் இருப்பதால் உங்கள் இடத்தை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். பதிவு செய்ய AMP அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும் போன்:044-23760007, 9841272146. (நிகழ்ச்சி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருக்கும்)

## SHANTAGNI - FEB 2016!

With the Blessings of Mahavatar Babaji, the first SHANTAGNI program held at Rishikesh in September 2015 was a great success! Now, we are very happy to inform you the details of the next **SHANTAGNI** Program:

**Dates:** 03.02.2016,Tuesday to 07.02.2016, Sunday

**Place: Sri Swami Chidbhavananda Ashramam,**
Vedapuri, Theni, Tamilnadu.

As the number of seats are restricted, please register your seat well in advance. To register call AMP office on 044-23760007, 9841272146. (Program will be bilingual in Tamil and English)

### AMP வாட்ஸ்அப் குரூப்ஸ்

AMP வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் ஒரு குரூப்பில் இல்லாவிட்டால் AMP அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் மொபைல் நம்பரை தெரியப்படுத்தவும்.

### Watch Guruji's TV Programs!

Makkal TV : Saturday 9.00 am
Pothigai TV : Monday 1.30 pm

Watch Guruji's TV programs also on our Website
www.alphamindpower.net

### AMP Whatsapp groups!

We are now creating AMP whatsapp groups so that we can communicate easily and you can also receive updates quickly. If you are not already in one of our groups, please contact AMP office and give your mobile number to be added.

## Collective meditation!

All Alpha Siddhas are joining together in a collective meditation at 5.30 am, 11.00 am and 10.00 pm. You are also invited to join us. You can meditate at your own residence at this time. You can do any Alpha meditation at that time. Mentally connect with Guru, God and Holy Siddhas. You will feel a lot of energy as thousands of Alpha Siddhas will be meditating at that time.

## கூட்டு தியானம்!

தினமும் காலை 5.30 மணிக்கும் காலை 11.00 மணிக்கும் இரவு 10 மணிக்கும் எல்லா ஆல்ஃபா சித்தர்களும் சேர்ந்து தியானம் செய்து வருகிறார்கள். நீங்களும் இதில் கலந்து கொளளுங்கள். உங்கள் வீட்டிலிருந்தபடியே இதே நேரத்தில் நீங்கள் தியானம் செய்யலாம். ஏதேனும் ஆல்ஃபா தியானம் நீங்கள் செய்யலாம். மனதால் குரு, கடவுள் மற்றும் சித்தர்களுடன் தொடர்பு கொள்ளவும். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான ஆல்ஃபா சித்தர்கள் தியானம் செய்வதால் மிகுந்த சக்தியை உணர்வீர்கள்!